மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka


விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 02 வியாழக்கிழமை (15.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148




## கருணா வருகை தந்தால் சட்டமே பதிலளிக்கும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) நாட்டுக்கு வருகை தந்தால் சட்டமே பதிலளிக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கருணா விடயத்தைப் பிரிட்டிஷ் பொலிஸாரும் அரசாங்கமும் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அவர் நாட்டுக்கு வருகை தந்தால் நாட்டிலுள்ள சட்டதிட்டங்களின் பிரகாரம் பதிலளிக்கப்படும்.

அந்தச் சட்டம் தொடர்பாக எனக்குத் தெரியாது என்று அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கத்தின் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் மோசடிகளுக்கு எதிராக மூன்று கட்டமாக நடவடிக்கை

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு


(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இடம்பெற்ற மோசடிகளுக்கு எதிராக மூன்று கட்டங்களாக நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

முதற் கட்டமாக தேர்தல் மோசடிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் இரண்டாவது கட்டமாக தேர்தல் வன்முறைகள் குறித்து சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்தப் போவதாகவும் மூன்றாவது கட்டமாக வன்முறை நிறைந்த தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

சர்வதேச நாடு (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவதில் அரசு உறுதியாகவுள்ளது



### ஜனாதிபதி மகிந்த உரை

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசுவதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரித்தானியாவிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## அழுத்தம் கொடுத்தாலும் போர்நிறுத்தம் இல்லை

### பிரதமர் ரட்ணசிறி அறிவிப்பு

(கொழும்பு)

மகிந்த அரசாங்கம் இனிஒருபோதும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தங்களை மேற்கொள்ளாது என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். தலைநகர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## பிரதான கட்சிகளுக்குச் சவாலாக தேசிய சுதந்திர முன்னணி இருக்கும்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. அதிருப்திக் குழுவைச் சேர்ந்த விமல் வீரவன்ச தலைமையிலான நாடாளுமன்ற உறுப்புரிமை கொண்ட குழுவினர் நேற்றுக் காலை தேசிய சுதந்திர முன்னணி என்ற புதிய கட்சியைத் தொடங்கியுள்ளனர்.

இக் கட்சியின் தலைவராக விமல் வீரவன்சவும் செயலாளராக ஜே.வி.பியிலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்று அரசுடன் இணைந்திருந்த நந்தன குணதிலகவும் செயற்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நட்சத்திரக் குறியீடு கட்சியின் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் நிகழ்வுகள் தொடங்கின.

இந் நிகழ்வில் விமல் வீரவன்ச தலைமையிலான புதிய கட்சி தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் கட்சிப் பிரதிநிதிகளின் முதலாவது மாநாடு நடைபெற்றது.

தேசிய சுதந்திர முன்னணியில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இந் நிகழ்வுக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் விமல் வீரவன்ச கூறியதாவது,

நாடு சுதந்திரம் அடைந்து 60 வருடங்கள் கடந்தபோதும் நாட்டிலுள்ள மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அத்தகைய சுதந்திரத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவே ஜே.வி.பி. உருவாக்கப்பட்டது.

ஆனால் ஜே.வி.பி. தலைமை மக்களின் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதுடன் கட்சியின் இலக்குகளை அடைவதிலும் தோல்வி கண்டுள்ளது. கிழக்குத் தேர்தலிலும் தோல்வி கண்டுள்ளது.

புதியதொரு அரசியல் நடவடிக்கையை நாம் மேற்கொள்ள இருக்கின்றோம். ஜே.வி.பியால் சாதிக்க முடியாமல் போன விடயங்களைப் புதிய கட்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது நேற்றுக் காலை 7.15 மணியளவில் விமானப்படையினரின் ஜெட் ரக விமானங்கள் விமானத் தாக்குதல்களை நடத்தியதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விமானத் தாக்குதல் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் பயிற்சி முகாம் மீது நடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வான்வழியாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் நன்கு உறுதி செய்யப்பட்ட பின்னரே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், குறிப்பிட்ட இலக்கு வெற்றிகரமாக தாக்கி அழிக்கப்பட்டதை விமானிகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார். (ச-5)

## அமெரிக்கப் பிரதிநிதி இலங்கைக்கு வருகிறார்

(கொழும்பு)

ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் பிரிவுக்கான அமெரிக்க வெளிவிவகார அமைச்சகத்தின் பிரதி உதவிச் செயலாளர் எரிகா ஜே.பார்க்ஸ் ரக்லஸ் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

அமெரிக்க அரசின் உயர்மட்ட பிரதிநிதியான இவர் அரச அதிகாரிகள், எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கூட்டமைப்பின் வேண்டுகோளை தமிழ் மக்கள் நிறைவேற்றியுள்ளனர்

### அரியநேந்திரன் எம்.பி. அறிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வேண்டுகோளை தமிழ் மக்கள் நிறைவேற்றியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

கிழக்குப் பிரதேசமக்கள் அரசாங்கத்தை இந்தத் தேர்தலில் தோற்கடித்துள்ளனர். ஆனால் ஜனநாயகத் தேர்தல் என்று கூறிக்கொண்டு சர்வாதிகாரத் தேர்தல் மூலம் கிழக்கு மாகாணத்தில் 61 வீதத்தினர் வாகளித்ததாக காட்டப்பட்டாலும் உண்மையில் தமிழ் மக்களில் 40 வீதத்திற்கும் குறைவானவர்களே வாக்களித்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமகன் படுகாயம்

(கிளிநொச்சி)

மன்னார், கூராயிலில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார். கூராய்ப் பகுதியில் நேற்று பிற்பகல் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது இக்கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் கிளிநொச்சி கோணாவிலைச் சேர்ந்த காத்தமுத்து கணபதி (வயது 29) என்பவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# மனைவியை வெட்டிக்கொன்ற கணவன் தலைமறைவு

மூளாய் பிள்ளையார் ஆலயத்திற்கு பின்னால் உள்ள சவாரித்திடலில் வைத்து தனது மனைவியை வெட்டிக் கொன்ற கணவர் தலைமறைவாகியுள்ளார்.

இக் கொலைச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. இச் சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தாயான ஒருவரே உயிரிழந்ததாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, மூளாய் பகுதியை சேர்ந்த கணவனும் மனைவியும் நேற்று மாலை மூளாய் பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள சவாரித்திடலில் மாடு கட்டுவதற்காக சென்றபோது திடீரென அக் கணவன் மனைவியை வெட்டிக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்பட்டது. பிரஸ்தாப கணவர் இன்று கொழும்புக்கு பயணமாக தயாராக இருந்ததாக கூறப்பட்டது.

கணவன் தலைமறைவான சம்பவத்தினையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்று இடம்பெறவுள்ளன. (எ)

## ஆவணப்படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைவட்டம் நடாத்திவரும் நிகழ்ச்சித் தொடரில் நாளை பி.ப 2 மணிக்கு புதிய கலைப்பீட கட்டத் தொகுதியில் கலைஞர்பேறு தொடர்பான இரண்டு ஆவணப்படங்களை காட்சிப்படுத்தவுள்ளதாக கலைவட்டத்தின் தலைவர் ஞா.வதனரூபி அறிவித்துள்ளார். (ச)

# இரண்டாவது நாளாக நேற்றும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நேற்று இரண்டாவது நாளாகவும் இயங்க வில்லை. கல்லூரி அதிபர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து அதிபர் உடுவில் கல்விக் கோட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும். இந்த இடமாற்றத்தை கண்டித்து ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையில் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படும் அதே வேளை கல்லூரி மாணவர்கள் அதிபரின் இடமாற்றத்தை கண்டித்து நேற்றும் நேற்று முன்தினமும் வகுப்புக்களை பகிஷ்கரித்துள்ளனர்.

இது தொடர்பாக தெல்லிப்பழை கல்விக் கோட்டம் வலிகாமம் கல்வி வலயம் என்பவற்றுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)



மானிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழக அங்கத்தவர் டாக்டர் சோ.சுந்தரராசனால் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்ட நிகழ்வில், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் டாக்டர் பேரானந்தம், டாக்டர் சுந்தரேசன், லயன்ஸ் கழக உப தலைவர் டாக்டர் சாந்தன், லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.துரைரத்தினம், உப அதிபர் திருமதி ஜெயந்தி விஜயகாந்தன், பாடசாலை அதிபர் சு.ஜெயவீரசிங்கம் மற்றும் மாணவிகளைப் படத்தில் காணலாம்.

## நல்லை ஆதீனத்தில் படிக்காசு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சைவ சமய குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தப் பெருமானின் அற்புதங்கள் நிகழ்வுகளாக சித்திரிக்கப்பட்டு நல்லை ஆதீனத்தில் நடைபெற்று வருகிறது.

அந்த வரிசையில் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு படிக்காசு பெற்ற நிகழ்வு நடைபெறும். (எ)

## முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்படும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை எதிர்வரும் ஜூன் 20,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

தனிப்பட்ட மாணவர்கள் தோற்ற விரும்பின் இல.66 நல்லூர் வீதி, நீராவியடி என்னும் முகவரியிலுள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ச)

# கம்பன் விழா மே 17இல் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா இம்மாதம் 17,18,19,20ஆம் திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இலக்கம் 11 இராமகிருஷ்ண தோட்ட லக்ஷ்மி கோவிலிலிருந்து கம்பன் படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றல், கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகும்.

நிகழ்வில் க.பொ.த உயர்தர பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதல் இடம்பெற்ற செல்வன் எஸ்.மயூரனுக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவிய □ஏற்றமிகு இளைஞர் விருது□ வழங்கப்படவுள்ளது. அத்துடன் □கம்பன் ஏற்றிய கைவிளக்கு□ என்னும் பொருளில் சொல்வேந்தர் சுகிசிவம் சிறப்புரை வழங்குவார்.

இரண்டாம், மூன்றாம், நான்காம் நாள் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் ஆரம்பமாகி இரு நேரங்களும் இடம்பெறும். இதில் இந்திய தமிழ்நாடு அறிஞர்கள் பலர் பங்குபற்றும் இளைஞர் விவாத அரங்கு, பட்டிமன்றம், சுழலும் சொற்போர், கவியரங்கம், அஞ்சலி அரங்கு, சிந்தனை அரங்கு, வழக்காடுமன்றம் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அத்துடன் இறுதிநாள் ஆன்றோர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். இதில் உச்ச நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன், கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம், பேராசிரியர் திருமதி ஞானகுலேந்திரன், கலாவினோதன் நா.கணபதிப்பிள்ளை(சின்னமணி), முற்போக்கு எழுத்தாளர் அ.முகமது சமீம், மூத்த பத்திரிகையாளர் அ.சிவநேசச்செல்வன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறமும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் 19ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் பி.ப 4 மணிக்கு கொடியிறக்க வைபவமும் இடம் பெறும். (ஓ)

# ஈ.பி.டி.பி கண்டனம்

(கொழும்பு)

மனிதர்கள் மீதான நேசிப்புக் கொண்டிருந்த செல்வி மகேஸ்வரி வேலாயுதம் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினைக்கு மாகாண சபை ஊடாக கட்டம் கட்டமாகத் தீர்வு காண முடியும் என்ற எமது நீண்ட முயற்சி வெற்றியளிக்கும்போது எம்மோடு மக்கள் பணியாற்றிய மகத்தான மக்கள் சேவகியை இன்று நாம் இழந்துள்ளோம்.

சர்வகட்சி குழுக்கூட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முதன்மைப்படுத்தி குரல் கொடுத்த தமிழ் மக்களின் தவப் புதல்வியை இன்று தமிழினம் இழந்துள்ளது. மனித நேயம் பேசிய செல்வி மகேஸ்வரி வேலாயுதத்தை புலிகள் படுகொலை செய்துள்ளனர்.

இக்கொலையை அனைவரும் கண்டிக்க வேண்டும். நிராயுதபாணிகள் மீது தொடர்ச்சியாக நடத்திவரும் படுகொலைகளை சர்வதேச சமூகமும்-மனித உரிமை ஆர்வலர்களும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

எமது அரசியல் தீர்வு முயற்சிகளின் முதற்கட்டமாக கருதப்படும் மாகாணத்துக்கான அபிவிருத்தி மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை செய்யும் பாரியமக்கள் சேவை ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்தில் அதைத் தனது இலட்சியமாக கொண்டிருந்த செல்வி மகேஸ்வரி வேலாயுதம் மீதான படுகொலை எமக்கு கவலையளிக்கிறது.

ஆனாலும் இந்தப் பணியை செவ்வனே செய்து முடிப்பதுவே அவருக்கு நாம் செய்யும் மரியாதையாகும் என ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மகேஸ்வரி வேலாயுதத்தின் கொலையை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (எ)

## சமாதானத்திற்கான விவாதம்

(அல்வாய்)

பருத்தித்துறை வாலிபர் கிறிஸ்தவ சங்கம் சமாதானத்திற்கான விவாதமொன்றை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இந்நிகழ்வில் தேவரையாளி இந்துக் கல்லூரி, கரணவாய் மகா வித்தியாலயம், இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, புற்றளை மகா வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

பங்குபற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்களும் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கப்படும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவிப்பார் என பருத்தித்துறை வாலிபர் கிறிஸ்தவர் சங்கச் செயலாளர் அ.வேதாபரணம் தெரிவித்துள்ளார். (ஓ-19)

# ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்



**வைத்திய கலாநிதி**

**செல்வி நவமலர் கனகரத்தினம்**

**(யாழ்.போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளர்)**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டுள்ள அம்மையார் அவர்கள், பல்வேறு வைத்திய நிறுவனங்களில் உயர்பதவி வகித்து தம் ஆளுமையால் அனைவரையும் கவர்ந்தவர்.

ஆண்டுதோறும் நடைபெறும் மகோற்சவக் காலங்களில் சிறப்பான வைத்தியப் பணிகளை ஆற்றி தமக்கென ஒரு முத்திரை பதித்தவர். நவமலர் அம்மையார் துர்க்காபுரம் மகளிர் இல்ல பிள்ளைகளின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு சிறப்பித்த பெருமை இவருக்குண்டு. ஈடு செய்ய முடியாத அம்மையாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கா துரந்தரியை பிரார்த்திக்கின்றோம்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

(C-1116)

## பரப்புரைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளையினரால் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர். வி.கே.கணேசலிங்கம் தலைமையிலான பரப்புரைக்குழுவினர் பரப்புரை நிகழ்த்தவுள்ளனர். (ஓ-134)

## உளசமூக அமைய கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார வைத்திய அதிகாரியாக பணியாற்றிய வைத்திய கலாநிதி செல்வி ந.கனகரட்ணம் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று இடம்பெற இருப்பதால் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையில் நடைபெறவிருந்த மாதாந்த மாவட்ட மட்ட உள சமூக அமையக் கூட்டம் ஒத்திவைக் கப்பட்டுள்ள தாகவும் அடுத்த கூட்டம் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## போட்டியும் போதைமருந்தும்

ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் அத்தனைபேரும் தாங்களே முதலில் வரவேண்டும். தங்களுக்கே பரிசு கிடைக்கவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். இப்படி ஆசைப்படுவதில் ஒருதவறும் இல்லை. ஆனால், சிலபேர் குறுக்குவழியில் வெற்றிபெற வேண்டும் என்று நினைப்பார்கள். இது தவறான எண்ணமாகும்.

1960 இல் ரோம் நகரில் நடந்த ஒலிம்பிக்கில் மிதிவண்டி ஓட்டும் இளம்வீரர் ஒருவர் போட்டி நிகழும் சமயத்தில் திடீரென இறந்துபோனார். அதை தீவிரமாக ஆராய்ந்து பார்த்ததில் அவர் போதை மருந்து உட்கொண்டிருந்தார் என்று கண்டுபிடித்தார்கள்.

அதன்பின், போதை மருந்து உட்கொள்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஆய்வுக் குழுவொன்றை நியமித்தனர். இவ் ஆய்வுக்குழு 1976இல், கனடா நாட்டில் நடந்த மொன்றியல் ஒலிம்பிக்கில் தான் முதன்முதலாக செயற்படத்தொடங்கியது. இருந்தாலும், பென் ஜோன்சன் என்ற விளையாட்டு வீரரால் தான் போதை மருந்து விவகாரம் பிரபலமானது எனலாம்.

போதைமருந்தை வாய்மூலமாகவும், மூக்கினாலும், ஊசி மூலமாகவும் உட்கொள்கிறார்கள். வேகமாக ஓடுதல், குண்டெறிதல், பளு தூக்குதல், நீளம் தாண்டல், உயரம் தாண்டல் போன்ற போட்டிகளில் கலந்து கொள்பவர்கள், தசைநார்கள் பெரிதாவதற்காக அனபோலிக் ஸ்டிரொய்ட் (Anabolic Steroid) மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள்.

கூடிய தூரம் ஓடுபவர்கள் கஞ்சா வகையைச் சேர்ந்த ஒருவகை போதை மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்டளவு தூரம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இனி ஓட முடியாது என்ற எண்ணம் வந்ததும், அதையும் மீறி இயந்திரம் போல செயல்பட வைக்கும் தன்மையுடையது.

துப்பாக்கி சுடுபவர்கள், அம்பு விடுபவர்கள், நடுக்கம் மற்றும் இதய படபடப்பை குறைக்க "பிளாக்கர்" என்ற இதய நோய் மருந்தை பாவிக்கின்றனர். இதேவேளை குத்துச்சண்டை வீரர்கள் மற்றும் மல்யுத்த வீரர்கள் தங்களது எடையைக் குறைக்க "லேசிக்ஸ்" என்ற மருந்தை உபயோகிக்கின்றனர்.

வீராங்கனைகள் அனபோலிக் ஸ்டிரொய்ட் மருந்தை உட்கொள்வதால் அவர்களின் தசைநார்கள் ஆண்கள் மாதிரி மாறிவிடுகிறது.

இது இவ்வாறிருக்க, போதைமருந்து பாவிப்பதால் ஏராளம் பாதிப்புக்கள் உண்டாகின்றன. அதாவது உடல் நிலை மோசமடையும்.பெண்களுக்கு, ஆண்கள் போல் குரல் மாறும். முகத்தில் முடி முளைக்க ஆரம்பிக்கும். தலைமுடி உதிரும். கர்ப்பப்பை புற்றுநோய் உண்டாகும் போன்ற பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

ஆண்களுக்கு, மிருக வெறி உண்டாகும். நுரையீரல் புற்றுநோய் வரும். இதயநோய், ரத்தக்கொதிப்பு, தலைமுடி உதிருதல் போன்ற பல நோய்களை உண்டாக்கும். இப்படி போதை மருந்து உட்கொள்பவர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்களுக்குண்டாகும் பாதிப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

அதனால், பரிசு வாங்கவேண்டும் என்ற நினைப்பில் பாதைமாறிச் செல்வது தவறாகும். இப்பொழுது ஒலிம்பிக்கில் இறுதிப் போட்டியில் பங்கு கொள்வோருக்கு தீவிர உடற்சோதனைக்குப் பின்னரே அனுமதி வழங்கப்படுகிறது.

ஒரு ஓட்டப்போட்டி நடந்துகொண்டிருந்தது. ஒருவன் முதலாவதாக ஓடிக்கொண்டிருந்தான். மற்றவர்களெல்லாம் பின்னுக்கே வந்துகொண்டிருந்தனர். திடீரென இன்னொருவன் மிக வேகமாக முன்னுக்கு வந்து கொண்டிருந்தான். முதலாவதாக வந்தவனுக்கு ஒரு சந்தேகம். "இவன் எப்படி திடீரென முன்னுக்கு வந்தான்? ஏதாவது போதை மருந்து சாப்பிட்டானோ?" என்று நினைத்து அவனிடம், "இவ்வளவு வேகமாக ஓடிவருகிறாயே? அது எப்படி?" என்று கேட்டான்.

"சார் நீங்கதான் காரணம்" என்றான் அவன்.

"எப்படி?" என்று கேட்க,

"நான் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. கொஞ்ச நேரத்துக்கு முன் உங்களிடம் ஓட்டோகிராப் வாங்க வந்தேன். அதன்போது என்னுடைய பேனையை உங்களிடம் கொடுத்தேன். அதை நீங்கள் திருப்பித்தரவில்லை. அதை வேண்டத்தான் உங்களைத் துரத்திக் கொண்டு வந்தேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ப்ரமுக வங்கியில் வைப்பிலிட்டோரின் பணம் மீள் அளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ப்ரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியில் பணத்தினை வைப்புச் செய்து அதனை மீளப் பெற்றுக் கொள்ளாத 15,200 வைப்பாளர்களுக்கு சுமார் ஆறு வருடங்களுக்குப் பின்னர் அரசாங் கத்தினால் நிர்வகிக்கப்படும் இலங்கை சேமிப்புகள் வங்கி (Sri Lanka Savings Bank) மூலம் தமது கணக்குகளை உறுதிப்படுத்துமாறு குறிப்பிடப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

இந்த வங்கியில் பணத்தினை வைப்புச் செய்தோர் மற்றும் கடன் பெற்றோர் ஆகியோரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மொத்தமாக வங்கியினால் செலுத்தப்படவேண்டிய முழுத் தொகை 670 மில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பணத்தினை வைப்பிலிட்டோருக்கு அவர்களது வைப்புத் தொகை மற்றும் ஏனைய விபரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பணமீதிகள் மற்றும் ஏனைய விபரங்களை தமக்கு உறுதிப்படுத்துமாறு இலங்கை சேமிப்புகள் வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்புச் செய்தவர்களுக்கு ஜுன் மாதம் 3ஆம் திகதிக்குப் பின்னர் ஒரு இலட்சம் ரூபாவரை வழங்கப்படவுள்ளதாகவும், மீதிப் பணம் எதிர்காலத்தில வழங்கப்படும் எனவும் வங்கி அறிவித்துள்ளது. சிறுவர் கணக்குகள், அவர்கள் குறித்த வயதினை எட்டும்வரை இலங்கை சேமிப்புகள் வங்கியின் கீழேயே தொடர்ந்தும் இருக்கும் எனவும் வங்கி அறிவித்துள்ளது. கடந்த 2002இல் செயலிழந்த ப்ரமுக வங்கியில் நிதியினை வைப்பிலிட்டவர்களுக்கு பணத்தினை மீளளிக்கும்பொருட்டுஇலங்கை சேமிப்புகள்வங்கிஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# மனித உரிமைகளைப் பாதுகாக்க, அரசாங்கம் தேசிய செயற்திட்டங்களை அமுல்படுத்தும்

## ஐ.நா.வில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அதனை ஊக்குவிப்பதற்கும் தேசிய செயற்திட்டங்களை



அமுல்படுத்துவதற்கு இலங்கை அர சாங்கம் திட்டமிட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அதனை ஊக்குவிப்பதற்கும் காணப்படும் சவால்களை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்த தேசிய செயற்திட்டம் மூலம் நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார். ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தில் பிரேரிக்கப்பட்டிருக்கும் அடிப்படைகளை உள்ளடக்கியதாகவும் அவற்றைப் பின்பற்றும் வகையிலும் இந்த தேசிய செயற்திட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

'சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைச் சட்டங்களுக்கு அமைய ஜனநாயக அரசாங்கம் என்றமுறையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் இலங்கை மக்களின் மனித உரிமை களைப் பாதுகாப்பதே எமது முதல் கடமையென நாங்கள் கருதுகின்றோம்' என ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான பருவ விபர அறிக்கையை முன்வைத்து உரையாற்றிய மனித உரிமைகள் அமைச்சர் தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்கான அடிப்படைகள்மற்றும்தொழிலாளர்மாநாடுகளில் இணக்கம் காணப்பட்ட மனித உரிமைகளைக் கடைப்பிடித்து. அவற்றின் அடிப்படைத் சேவைகளைநிறைவேற்றுவதே அரசாங்கத்தின் குறிக்கோள் எனவும் மஹிந்த சமரசிங்க கூறியுள்ளார். (அ-5)

# இராசிபலன்

15.05.2008
(வைகாசி 02, வியாழக்கிழமை)
உத்தரம் முன்னிரவு 07.46 மணிவரை
ஏகாதசி பின்னிரவு 02.10 மணிவரை
இராகுகாலம் 01.23-02.53 மணிவரை
சுபநேரம்-07.23-08.53 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |
| இடபம் | வியாபார நன்மை, சிறுவியாதி, முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| மிதுனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், சுபசெலவு, முயற்சி தாமதம். |
| கடகம் | கூட்டு முயற்சி, இனிய நிகழ்வு, தனவருவாய், பிரயாண சுகம். |
| சிங்கம் | விவாதம், காரியதாமதம், வீண் செலவு, கௌரவக்குறைவு. |
| கன்னி | வெகுமானம், கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பிதாசிந்தை, பிரயாணம், முயற்சி தாமதம், சயனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | கீர்த்தி, காரியநன்மை, குடும்ப சுகம், விருந்துபசாரம். |
| தனுசு | அதிகாரம், நண்பர்கள் உதவி, கடின உழைப்பு, தேகநலன். |
| மகரம் | வீண்பயம், புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| கும்பம் | பிரயாணபயம், காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு. |
| மீனம் | செல்வாக்கு, காரிய அனுகூலம், திடீர்பயணம், அபூர்வசந்திப்பு. |

வளவன்

# விண்ணப்பம் கோரல்


சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சினால் பின்வரும் துணை மருத்துவ பாடநெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. மருந்தாளர்கள்- (Pharmacist)
2. மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் -(Medical laboratory Technologist)
3. இயன் சிகிச்சையாளர்கள் - (Physiotherapists)
4. சிகிச்சை கதிர் படப்பதிவாளர்கள்- (Therapy - Radiographer)
5. பிணியாய் கதிர்படப்பதிவாளர்கள்- (Diagnostic Radiographer)

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப் போர் 30.06.2008இல் 18முதல் 30வயதிற்குட்பட்ட வர்களாக இருத்தல் வேண்டும். 2001 இருந்து 2006வரையான ஆண்டுகளில்கா.பொ.த உயர்தரப்பரீட்சையில் பெற்ற 'Z' புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 30.06.2008 ஆம் திகதியிலோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர். (நிர்வாகம்)02, சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு 'சுவசிறிபாய' இல 385வண, பத்தேகம விமல் வீரவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்குஅனுப்பப்படல் வேண்டும்

மேலதிக தகவல்களையாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலும் சகல சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனைகளிலும், யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் பார்வையிடலாம் எனயாழ். மாவட்டபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதி பெற்ற திருமதி ஆனந்தி குலசேகரத்தின் மரண இழப்பீட்டு தொகைக்குரிய காசோலையை, காப்புறுதி அமைப்பாளர் த.கனகசபை, அன்னாரின் கணவர் கா.குலசேகரத்திடம் வழங்குவதையும், நிர்வாக உத்தியோகத்தர் A.சபேசன் மற்றும் T.அஜித்குமார், J.பவிதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சிறுவர் நாடகப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் நாடகத் தலைப்பையும், நாடகப் பிரதியையும் பங்கு பற்றும் மாணவர் பெயர்ப்பட்டியலையும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்யுமாறு ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் கோட்டமட்ட, வலயமட்டப் போட்டி நிகழ்வு யூன் மாதம் முதலாம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் காலை 9மணிக்கு ஆரம்பமாக உள்ளதாகவும் பாடசாலையில் இருந்து மாணவர்கள் பங்குபற்றுவதற்கு ஆவன செய்யுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஓ-19)




## ஓய்வுபெறுகிறார்

(அல்வாய்)

அல்வாய் வடக்கு றோ.க.த. அதிபர் ம.ஜெயவரதராஜா இம் மாதம் 14ஆம்திகதி முதல் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். (ஓ-19)

## கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை

(பருத்தித்துறை)

கோழிகளுக்கு ஏற்றப்படும் அம்மை நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் எதிர்வரும் 25 ஆம்திகதி காலை 8.30 மணிக்கு அம்மை நோய் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் கோழிப் பண்ணைகளை வைத்திருப்போர், சுயதொழிலாக வீடுகளில் கோழி வளர்ப்போர் தடுப்பு மருந்தை கோழிகளுக்கு ஏற்றிக்கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-5)

## அவசரகால கல்விச் செயலமர்வு

(அல்வாய்)

இம்மாதம் 21, 22ஆம் திகதிகளில் கல்வியமைச்சில் நடைபெறவுள்ள அவசரகால கல்விச் செயலமர்வில், வடமராட்சி கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் அ.கி. மனுநீதியும், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் பங்குபற்ற உள்ளனர். (ஓ-19)

## மஹோற்சவம்

மட்டுவில், சந்திரபுரம் ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் இம் மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு சப்பரத்திருவிழாவும், 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 2மணிக்கு சுமங்கலிப் பெண்கள். கன்னிப் பெண்கள் பங்குபற்றும் தீபபூஜை, கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆசார்ய உற்சவம் ஆகியன இடம் பெறும். (ஓ)

# சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளை சேர்க்க நீதிமன்ற அனுமதி அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு நீதிமன்றங்களின் அனுமதி பெற்ற பின்னரே சேர்க்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகள் பெற்றோர்களுடனேயே வளர வேண்டும் என்ற சிறுவர் அமைப்புகளின் செயற்பாடுகள், கட்டளைகளைத் தொடர்ந்து இந் நடவடிக்கை நீதிமன்ற அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த அலுவலகங்களில் பணிபுரியும் சிறுவர்களுடன் தொடர்புடைய சிறுவர் நன்னடத்தை, அலுவலர் சிறுவர் மேம்பாட்டு அலுவலர் போன்றோர்களுக்கும் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-5)

# கால்நடை வளர்ப்பாளர்களை பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் அருகில் உள்ள அரசினர் கால்நடை வைத்திய நிலையங்களில் பதிவு செய்துகொள்ளுமாறு பருத்துத்துறை கரவெட்டி அரசினர் கால்நடை வைத்திய அதிகாரிகள் கேட்டுள்ளனர். தற்போது தொண்டைமானாறு, கெருடாவில் ஆகிய பகுதிகளில் கால்நடை வளர்ப்போரின் விபரங்களை பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் திரட்டி வருகின்றது. ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் தாமதமின்றி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-5)

# டெங்கு நோய்க்கான மருந்து கண்டுபிடிப்பு சித்த மருத்துவபீட மாணவர்கள் சாதனை?

நோய்களுக்கான மருந்தை தாம் கண்டறிந்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த ஆயுர்வேத மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மருந்தை, தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், அந்த மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் அண்மைக்காலங்களில் பரவி வரும் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களினால் பெருமளவானோர் மரணம் அடைந்துள்ளதுடன், பாரிய உடல் உபாதைகளுக்கும் உள்ளாகி வருகினறனர். இந்த நிலையில் யாழ். மாணவர்களின் இந்தக் கண்டுபிடிப்பு மக்களுக்கு பெரும் ஆறுதலை அளிக்கும் என நம்பப்படுகின்றது. (அ-5)

# விண்ணப்பம் கோரல்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சமூக சேவை மனப்பாங்குடைய பகுதிநேர தொண்டர்களை சேர்ப்பதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தெரிவுசெய்யப்படும் தொண்டர்கள் தமது பகுதியில் உள்ள முன்பள்ளிகளில் போஷாக்கு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் உணவு விநியோகத் திட்டத்தை அமுல்படுத்தல், மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பித்தல், தொடர்ந்தும் எதிர்வரும் காலங்களில் மது, புகைத்தல், போதைப்பொருள் பாவனைத் தடுப்பு மற்றும் சிறுவர் கழகம் தொடர்பான செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபடுதல் வேண்டும்.

மேற்படி பணிக்கு பொருத்தமான கொடுப்பனவும் பிரயாண வசதியும் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித்துள்ளார். விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தை நல்லொழுக்கச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 18 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் க.பொ.த.சாதாரணம் அல்லது உயர்தரம் சித்திபெற்றவர்கள், மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனை மற்றும் துர்நடத்தை அற்றவர்கள், சமூக மட்ட நல்லொழுக்க, இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்கள், சமூக சேவையில் ஈடுபாடும் அனுபவமும் உள்ளவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-5)

## கடமை நிறைவேற்று அதிபர் நியமனம்

(அல்வாய்)

வல்வெட்டித் துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் கடமை நிறைவேற்று அதிபராக யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நா.கண்ணதாசன் நியமிக்கப்பட்டுள்ளார் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

## கொடிவாரம்

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் கொடிவாரம் நாளை வெள்ளிக்கிழமை முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கொடிவாரம் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இக்கொடி வாரத்தினை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்கள். (அ-5)

## விக்னேஸ்வரக் கல்லூரியில் சஞ்சிகை வெளியீட்டு விழா

கரவெட்டி- விக்னேஸ்வரக் கல்லூரி விஞ்ஞான மாணவர் மன்றத்தின் ''பூந்துணர்'' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று மு.ப 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சி.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். சஞ்சிகையின் ஆய்வுரையை யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி வே. கமலநாதன் நிகழ்த்துவார். முதற்பிரதியை பாடசாலை அபிவருத்திச் சங்க செயலாளர் லயன் சி.ந.கதிர்வேலு பெற்றுக்கொள்வார். (அ-52)

## நல்லை ஆதீனத்தில் இன்று வெப்புநோய் தீர்த்த உற்சவம்

சைவசமய குரவர்களில் முதன்மை வாய்ந்தவரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் செய்த அற்புத நிகழ்வுகளைச் சித்தரிக்கும் முகமாக நடைபெற்று வரும் தொடர் நிகழ்வில் இன்று நல்லை ஆதீனத்தில் வெப்புநோய் தீர்த்த உற்சவம் மாலை 5:30 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## கண்ணகை அம்மன் ஆலயங்களில் வைகாசிப் படிப்பு உற்சவம்

(பருத்தித்துறை)

புலோலி வடக்கு கண்ணகை அம்மன் ஆலயம், மந்திகை கண்ணகை அம்மன் ஆலயம், மாதனை கண்ணகை அம்மன் ஆலயங்களில் வருடாந்த வைகாசிப் படிப்பு 12ஆம்திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இவ் உற்சவ காலங்களில் இவ் ஆலயங்களில் கோவலன் கண்ணகி கதை படிக்கப்படுகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை கல்யாணப் படிப்பும், ஞாயிற்றுக்கிழமை மாதவி கூத்தும், திங்கட்கிழமை சிலம்பு கூறலும் இடம்பெற்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் பொங்கல் விழாவுடன் உற்சவம் பூர்த்தியடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

## இரதோற்சவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அத்தியடிப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். (அ-52)

## ஆரோக்கிய பூஜையும் பஜனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இல 139(35) கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தில், ஸ்ரீ கல்கி பக்தமாவதி சமேத ஸ்ரீ கல்கி பகவான் ஆகியோரது ஆரோக்கிய பூஜையும் பஜனையும் எதிர்வரும் 17 அம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அவ்வேளையில் அண்மையில் ஸ்ரீ அம்மா பகவானிடம் சென்று மகா தீட்சை பெற்ற பக்தை அனைவருக்கும் நல்லாசி வழங்கவுள்ளார். அத்துடன் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளி மாலை 3.30மணிக்கும், மூன்றாம் சனி காலை 9.30 மணிக்கும் பூஜையும் பஜனைகளும். வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணிக்கு விசேட பூஜைகளும் நடைபெறுவதாக ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம் அறிவித்துள்ளது. (ஓ)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 8, தரம் 9 வகுப்புகளில் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் செயலமர்வு நடாத்தப்படவுள்ளது.

இச் செயலமர்வுக்கு மேற்படி வகுப்புகளில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு பாடசாலையில் இருந்து ஒருவராவது தவறாது சமுகமளிக்க வேண்டும் என்றும் பங்குபற்றும் ஆசிரியர்கள் தரம் 8, தரம் 9 வகுப்புக்களுக்கான தமிழ்மொழிப் புத்தகம். ஆசிரிய அறிவுரை வழிகாட்டி, பாட வழிகாட்டி என்பனவற்றை தம்முடன் கொண்டு வருமாறும், வடமராட்சி கல்வி வலயக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)



சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொதுநூலகத்தில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கண்காட்சியை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய உப அதிபர் திருமதி செல்வராணி ஜெகநாதன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும், பாடசாலை மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதனை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அக்தர் அமர்க்களப் பந்துவீச்சு; கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி

## சேவாக் அணி பரிதாபம்

(கொல்கத்தா)

சொய்ப் அக்தரின் அமர்க்களப் பந்து வீச்சால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தால் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் தொடரில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5-வது வெற்றியை பெற்றது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினமிரவு கொல்கத்தாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 35-வது போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ஷேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் பெரும் சர்ச்சைகளை கடந்து ஐ.பி.எல். தொடரில் முதன் முறையாக பாகிஸ்தான் அணியின் வேகப்புயல் சோயிப் அக்தர் கொல்கத்தா அணி சார்பில் களமிறங்கினார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சல்மான் பட் 44 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மகேஸ், மஹ்ரூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 134 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி அக்தரின் வேகத்தில் சிக்கி முன்னணி துடுப்பாட்ட வீரர்களான காம்பீர் (10) சேவாக்(0) டி வில்லியஸ் (7) திவாகி (09)வரிசையாக ஆட்டமிழந்து ஏமாற்ற 17.5 ஓவர்களில் சகல



விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 23 ஓட்டங்கள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தது.

இதில் மிஷ்ரா 31 ஓட்டங்களையும் டில்சான் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சொய்ப் அக்தர் 3 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக் கெட்டுக்களை வீழ்த்தியதுடன் சுக்லா 5 பந்துகள் பந்துவீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.


ஆட்ட நாயகனாக சொயிப் அக்தர் தெரிவானார்.

இவ் வெற்றியுடன் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் ஆடிய 9-வது ஆட்டத்தில் 5-வது வெற்றியைப் பெற்று புள்ளிகளின் அடிப்படையில் 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை இத்தோல்வியுடன் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணி தான் ஆடிய 9-வது ஆட்டத்தில் 5-வது தோல்வியை சந்தித்து புள்ளிகள் அடிப்படையில் 6ஆம் இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது. (5)

## சிறந்த அணித்தலைவர் வோர்ன் யூனிஸ்கான் புகழாரம்

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தொடர் வெற்றிக்கு அணித்தலைவர் முக்கிய காரணம் என பாகிஸ்தான் வீரர் யூனிஸ்கான் புகழாரம் சூட்டியுள்ளார். இந்தியன் பிரிமியர் லீக்



(ஐ.பி.எல்) சார்பில் இருபது-20 தொடர் நடக்கிறது. இதுவரை நடந்து முடிந்த போட்டிகளில் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்து வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் ர அணி சிகர்களின் கவனத்தை கவர்ந்துள்ளது.

அரையிறுதி தகுதியை எட்டும் நிலையிலுள்ள ராஜஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ள யூனிஸ்கான் அளித்த பேட்டியில்,

சிறந்த அணித் தலைவர்கள் தலைமையில் ஆடுவது ஆற்றலையும் உந்துதலையும் தருகிறது என நினைக்கிறேன். தொடரில் வோர்ன் அனுபவம் பளிச்சிடுகிறது. துடுப்பாட்ட வீரர்களின் பலவீனங்களை உடனடியாக கணித்து விடுகிறார்.

சூழ்நிலைக்கேற்ப சிந்தித்து செயல்படுகிறார். அதிகம் பேசிக் கொண்டதில்லை என்றாலும் அவர் மீது எப்போதும் நல்ல மரியாதை வைத்துள்ளேன். இங்கிலாந்து உள்ளூர் அணியில் அவருக்கு எதிராக ஆடியபோது இரண்டு சதங்கள் அடித்தேன். டெஸ்ட் கிரிக்கெட் தான் வீரர்களுக்கு உண்மையான சவால். இவ்வாறு யுனிஸ்கான் கூறினார். (5)

## ஆறு வீரர்கள் விடுவிப்பு

(கொல்கத்தா)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தமது 6 வீரர்களை ஐ.பி.எல். தொடரில் இருந்து விடுவித்துள்ளது. ரனதீப் போஸ், சுரேஷ் லாஹிரி, செட்டர்ஷ்வர் புஜாரா, யொஷ்பால் சிங், றொஹான் பனர்ஜி மற்றும் நகலன்ட்ஸ் ஹொகைடோ ஆகிய வீரர்களையே கொல்கத்தா அணி தொடரில் இருந்து விடுவித்துள்ளது.

ஐ.பி.எல். இருபது -20 தொடர் தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளதால் மேற்படி வீரர்களுக்கு போட்டிகளில் சந்தர்ப்பம் வழங்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலேயே இந்த வீரர்களை விடுவித்ததாக கொல்கத்தா அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. எனினும் மேற்படி வீரர்கள் தொடர்ந்தும் கொல்கத்தா அணிக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்துள்ளனர். (5)

## சிறிசாந்தைக் கன்னத்தில் அறைந்த விவகாரம்

# ஹர்பஜனுக்கு 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது பி.சி.சி.ஐ.

(புதுடில்லி)

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாட இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ.) தடை விதித்துள்ளது.

மொகாலியில் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் போது கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் வேகப் பந்து வீச்சாளர் சிறிசாந்தை, ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்தார்.

இதையடுத்து ஐ.பி.எல்.போட்டிகளில் விளையாட ஹர்பஜன் சிங்கிற்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் இப் பிரச்சினை குறித்து விசாரித்த விசாரணை அதிகாரி வழக்கறிஞர் நானாபதி, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் நேற்று முன்தினம் தனது அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

இதைத் தொடர்ந்து நேற்றுக் ஹர்பஜன் சிங், ஒழுங்கு நடவடிக்கை குழு முன்பாக ஆஜரானார். அவரிடம் விசாரணை நடத்திய ஒழுங்கு நடவடிக்கைக் குழு, சிறிசாந்தைக் கன்னத்தில் அறைந்த விவகாரம் தொடர்பாக ஹர்பஜன் சிங் ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது.

இத் தடை காரணமாக பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தில் ஹர்பஜன் சிங் இடம்பெற மாட்டார். பாகிஸ்தானில் நடைபெறும் ஆசியக் கோப்பைப் போட்டிகளிலும் இரண்டு ஆட்டங்களில் ஹர்பஜன் சிங் விளையாட முடியாது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடத்தை விதிகள் 3.2-1 இன் கீழ் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஹர்பஜன் சிங்கிற்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என்றும் இந்



தியக் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. (5)

## நடாலின் இரண்டாவது இடம் பறிபோகும் அபாயம்

உலக டென்னிஸ் தரவரிசையில் தனது இரண்டாவது இடத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஸ்பெயினின் ரபேல் நடால் தெரிவித்துள்ளார். செர்பியாவின் மூன்றாம் நிலை வீரர் நொவக்ட் ஜோவிக் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிக்கு முன்பாக இரண்டாவது இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளதாகவும் நடால் குறிப்பிட்டார்.

தற்போது உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள ரபேல் நடால் அண்மைக் காலமாக போட்டிகளில் சோபிக்கத் தவறி வருகிறார். இந்நிலையில் உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தை பிடிக்க மேலும் 225புள்ளிகள் மாத்திரம் தேவைப்படும் நிலையில் நொவக்ட் ஜோவிக் காணப்படுகிறார்.

இதனிடையே அண்மையில் முடிபடைந்த ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ட்ஜோவிக் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள ஹம்பர்க், ரோலன்க்ரொஸ் அல்லது விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளுள் ஒன்றில் சோபிக்கும் பட்சத்தில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறி விடுவார்.

இந்நிலையில், தான் 3 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ள நடால் மீண்டும் இரண்டாவது இடத்தை பிடிக்க கடுமையாக போராடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக டென்னிஸ் தரவரிசை வரலாற்றில் நீண்ட காலமாக இரண்டாவது இடத்தை தக்க வைத்துக்கொண்ட வீரராக நடால் சாதனை படைத்துள்ளார். அவர் 2005ஆம் ஆண்டு ஜுலை 25ஆம் திகதி முதல் முறையாக தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். அது முதல் அவர் இரண்டாவது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உலக பெண்கள் டென்னிஸ் தரவரிசை பட்டியலில் மரியா ஷரபோவா, அன்னா இவனோவிக்கை பின் தள்ளி இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளார். (5)

## விலகினார் லக்ஷ்மன்

(ஐதராபாத்)

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவர் வி.வி.எஸ். லக்ஷ்மன், ஐ.பி.எல். இருபது -20 தொடரில் இருந்து காயம் காரணமாக விலகிக் கொண்டார். வலது மணிக்கட்டில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் போட்டிகளில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலை வராக முன்னாள் ஆஸி. வீரர் அடம் கில்கிறிஸ்ட் தொடர்ந்தும் செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே டெக்கான் சார்ஜர்ஸ் அணி இந்த தொடரில் 9 போட்டிகளுள் வெறும் இரண்டு ஆட்டங் களில் மாத்திரம் வெற்றி பெற்று தொடரின் அரையிறுதிக்குள் நுழைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)



# சீனாவை உலுக்கியது பூகம்பம் 15 ஆயிரம் பேர் பலியாகினர்

## ஒரு இலட்சம் பேரைக் காணவில்லை எனவும் தெரிவிப்பு

(சீனா)

**சீனாவில் பூகம்பம் தாக்கியதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரம் என அதிகாரிகள் கூறுகின்ற போதிலும் ஒரு இலட்சம் பேரைக் காணவில்லை என்றும் கட்டடங்களுக்கிடையில் புதையுண்டோ அல்லது காயமடைந்தோ இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.**

சீனாவில் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஏற்பட்டுள்ள இந்த பூகம் பத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதி பெரிய அளவில் பரந்து விரிந்த ஒரு பகுதியாகும். மூன்று மாகாணங்களை உள்ளடக்கி ஆயிரம் கிலோ மீற்றருக்கு மேலான பரப்பளவுள்ள பகுதி பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.



சின்சுவான் கான்சு மற்றும் யூனான் மாகாணங்கள் இந்த பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பூகம்பத்தின் மையப்பகுதி சின்சுவான் மாகாணத்தில் இருந்தது. ஆனாலும் பாதிப்புக்குள்ளான மூன்று மாகாணங்களில் பெரிய நகரங்களும் அடங்குகின்றன.

### மேலும் 10 ஆயிரம் பேர்

சின்சுவான் மாநிலம்மியான்சு நகரில் மட்டும் ஏறத்தாழ 10ஆயிரம் பேர் இடிபாடுகளில் சிக்கி புதையுண்டு கிடப்பதாக சீன நாட்டின் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. மலைப்பாங்கான அந்த மாவட்டத்தில் பூகம்பத்தை அடுத்து புயல் காற்றுடன் மழை பெய்து வருவதால் மீட்பு பணி பாதிக்கப் பட்டுள்ளது. மண் சரிவு ஏற்பட்டு சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் வாகனங்கள் மூலமோ ஹெலிகாப்டர்கள் மூலமாகவோ இராணுவத்தினர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக செல்ல முடியாததால் நடந்தே சென்றனர். இதனால் சென்சுவான் மாவட்டத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி இன்னும் முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை.

### ரசாயன வாயு கசிவு

ஷிபாங் நகரில் ரசாயன தொழிற்சாலை இடிந்ததில் ஏற்பட்ட வாயு கசிவினால் மட்டும் 80 மாணவர்கள் உள்பட 600 பேர் உயிர் இழந்தனர். அந்த நகரில் மட்டும் 920 மாணவர்கள் உள்ளிட்ட 2 ஆயிரத்து 300 பேர் புதையுண்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.



80 சதவீதத்துக்கும் அதிகமான கட்டடங்கள் குறிப்பாக பல பள்ளிக்கூட கட்டடங்கள் இடிந்து விழுந்த செச்சுவான் நகரில் மட்டும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். அங்கு கவச வாகனங்களில் விரைந்த இராணுவத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### சோகத்தில் மூழ்கிய நகரம்

900 மாணவர்கள் புதையுண்டு இருக்கலாம் என்று கருதப்பட்ட ஜுயூவான் நடுநிலைப் பள்ளிக்கூட இடிபாடுகளில் இருந்து 60க்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இந்த பள்ளி தவிர ஜிங்கியான் நகர பள்ளிக்கூட இடிபாடுகளில் சிக்கிய 420 மாணவர்களில் நேற்று காலை வரை 100 மாணவர்கள் வரைதான் மீட்கபபட்டு இருந்தனர்.

சென்சுவான் பள்ளிக்கூட இடிபாடுகளில் சிக்கியுள்ள மாணவர்களின் பெற்றோர் ஏறத்தாழ 2 ஆயிரம் பேர் ,இரவு முழுவதும் ஒரு வளாகத்தில் கூடி தங்கள் பிள்ளைகள் உயிர் பிழைப்பதற்காக பிரார்த்தனையில் ஈடுப்பட்டனர். அந்த நகரமே சோகத்தில் மூழ்கியுள்ளது.



இந்தப் பேரிடரை சமாளிக்க பல நாடுகள் தமக்கு உதவ முன்வந்துள்ளதாக சீன அரசு கூறுகிறது. அகற்கான தமது மனமார்ந்த நன்றியினையும் சீன அரசு தெரிவித்துள்ளது. அது மட்டுமல்லாமல் இவ்வாறான பேரழிவு ஏற் படும் போது நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஒருங்கிணைப்பாளர்கள் உதவ முன் வந்துள்ள நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் சீனா கூறியுள்ளது.

பல நாடுகள் சீனாவுக்கு உதவ முன் வந்திருந்தாலும் சீனாவுக்குள்ளேயே பெருமளவிலான வளங்கள் இருக்கின்றன. அதாவது இவ்வாறான அசம்பாவிதங்களின் போது சமாளிக்கக் கூடிய வளங்களும் திறமைகளும் சீனாவுக்குள்ளேயே இருக்கின்றன என்று கூறும் பீஜிங்கிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சம்மேளனத்தைச் சேர்ந்த பிரான்ஸ் மார்கஸ், சீன அதிகாரிகள் இந்த வளங்களை உடனடியாக திரட்டி செயல்படுவதில் விரைவாக ஈடுபட்டார்கள் என்றும் கூறுகிறார்.

உதவிகள் வந்து சேரும் வரை உணவும் குடிநீரும் தேவைப்படுபவர்கள் அதற்கான நடவடிக்கைகளில ஈடுபட வேண்டும் எனவும் ஒலிபரப்பு செய்யப்படுகிறது. அங்கு நம்ப முடியாத அளவில் பெருமளவில் ஆயிரக் கணக்கான மக்கள்அமைதியாக உதவியை எதிர் பார்த்து சாலையோரங்களில் உட்கார்ந்திருப்பதைக்காணக் கூடியதாக இருக்கின்றது என அதை நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள்.

சீனாவில் எதிர்வரும்ஓகஸ்ட் மாதம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் இந்தப் பூகம்பம் சீனாவுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனினும ஒலிம்பிக் நடக்கும்பகுதியில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையென ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டுவடக்கு சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் இரண்டரை இலட்சம் பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# நீண்ட நாட்கள் வாழ்ந்து தமிழக மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் -கருணாநிதி ஆசை

(சென்னை)



முதல்வர் கருணாநிதி சட்டசபையில் உரையாற்றியுள்ளார்.

தி.மு.க. ஆட்சி பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகள் முடிவடைந்துள்ளதையொட்டி சட்ட சபையில் முதல்வர் கருணாநிதிக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து சட்டசபையில் அவர் ஆற்றிய உரை உருக்கமானதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவர் தனது உரையில் தான் நீண்ட நாட்கள் வாழ்ந்து தமிழக மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும்.

அத்துடன் தலைவர்கள் ஒன்றுபட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளதாகவும் இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-5)

# உலக தரிசனம்

# கடும் காற்றினால் படகு கவிழ்ந்து பங்களாதேஷில் 41 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷ் கோராத்ரா ஆற்றில் படகு கவிழ்ந்ததில் 41 பேர் பலியானார்கள். இந்த சம்பவம் கிஷோர்கஞ்ச் மாவட்டத்தில் நடந்தது.

2 அடுக்கு படகில் 100 பேர் பயணம் செய்தனர். படகு ஆற்றில் சென்றபோது திடீர் என்று மழையும் காற்றும் படகை அலைக் கழிக்க தொடங்சின.

இதனால் பீதி அடைந்த பயணிகள் அனைவரும் படகின் கூரைக்கு வந்து குவிந்தனர். கண்ணிமைக்கும் நேரத்துக்குள் படகு கவிழ்ந்தது.

இதில் பயணம் செய்த அனைவரும் ஆற்றில் மூழ்கினார்கள். அவர்களில் 41 பேர் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். மற்றவர்கள் நீந்தி கரை சேர்ந்தனர்.

இறந்தவர்களின் உடல்களை தேடிக் கண்டு பிடிப்பதற்காக மீட்பு குழுவினர் ஆற்றில் இறங்கி தேடுதலை மேற்கொண்டனர். (அ-5)

# லெபனான் நெருக்கடிக்கு ஈரானே காரணம் சவுதி வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

(ஈரான்)

லெபனானில் மேற்குலகுக்கு ஆதரவான நிலையை எடுக்கும் அரசின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் சவுதி அரேபியாவும் ஈரானும் கடும் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அங்கு 60 பேர் பலியாகியுள்ளனர்.

லெபனானில் செயல்படும் இஸ்லாமியக் குழுவான ஹெஸ்பொல்லா அமைப்பு அங்கு ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபடக் காரணம் ஈரானால் அளிக்கப்படும் ஆதரவு என தாம் கருதுவதன் விளைவு அரபு நாடுகளுக்கும் ஈரானுக்கும் உள்ள உறவை பாதிக்கும் என சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் சௌத் அல் பைசல் தெரிவித்துள்ளார்.

ஆனால் லெபனானில் தலையிடாத ஒரே நாடு ஈரான் தான் எனக் கூறியுள்ள ஈரானின் அதிபர் மஹ்மூத் அஹமதி நிஜாத் சவுதி அரேபியாவின் அமைச்சர் கோபாவேசத்தில் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# 17 குழந்தை பெற்ற பெண்ணின் சாதனை இன்னும் தொடர்கிறது

(டான்டிடவுன்)

ஆர்கன்சாசை சேர்ந்த பெண் இதுவரை 17 குழந்தைகள் பெற்று தற்போது 18ஆவது முறையாக கர்ப்பம் தரித்துள்ளார். ஆர்கன்சாசின் வடமேற்கு பகுதியில் உள்ளது டான்டிடவுன் இங்கு வசிப்பவர்மிச்லே வயது 41. இவரது கணவர் டுகார். இந்த தம்பதிகள் இனப் பெருக்கத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர். இது வரை மிச்லேவுக்கு 17 குழந்தைகள் பிறந்துள்ளன.

தற்போது மீண்டும் கர்ப்பம் தரித்துள்ளார். டான்டிடவுனில் குழந்தைகள் சுதந்திரமாக விளையாடவேண்டும் என்பதற்காக 7 ஆயிரம் சதுர அடியில் பிரமாண்ட வீட்டை கட்டியுள்ளார் டுகார்.

17 குழந்தைகளும் இங்கு ஓடிப்பிடித்து விளையாடுகின்றனர். மிச்லேயின் குழந்தைகளில் 10 பேர் ஆண்கள் ஏழு பேர் பெண்கள் மூத்த குழந்தை ஜோஷுக்கு 20 வயதாகிறது. கடைசியாக பிறந்த குழந்தையின் வயது ஒன்பது மாதம். எல்லா குழந்தைகளின் பெயர்களும் ஜே என்ற ஆங்கில எழுத்தில் துவங்கும்படி வைத்துள்ளனர்.

குழந்தைகளில் மூன்று பேர் டிசம்பர் மாதமும் மூன்று பேர் ஜனவரி மாதமும் பிறந்தவர்கள். எனவே இந்த இரண்டு மாதங்களில் அடுத்தடுத்து பிறந்தநாள் கொண்டாடுவதில் மிச்லே டுகார் தம்பதி படு பிசியாக இருப்பர். இத் தம்பதியினரின் குழந்தைகள் தனியாக பள்ளிக்கு செல்வதில்லை. வீட்டுக்கு வந்து ஆசிரியர்கள் பாடம் சொல்லித்தருகின்றனர். (அ-5)

# ஹிஸ்புல்லாவை முதலமைச்சராக நியமிக்குமாறு

## ஜனாதிபதியிடம் கடிதம் கையளிக்க முஸ்தீபு

### முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பதவி துறக்கவும் முடிபு!

(கொழும்பு)

ஜனாதிபதி வாக்குறுதியளித்ததன் பிரகாரம் கிழக்கு மாகாண முதலமைச்சராக எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாவை நியமிக்க வேண்டும் எனக் கோரும் கடிதம் ஒன்றை முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி, முஸ்லிம் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் அதிக ஆசனங்களைப் பெற்ற முஸ்லிம்களின் பிரதிநிதியான ஹிஸ்புல்லாவையே ஜனாதிபதி முதலமைச்சராக நியமனம் செய்ய வேண்டும் என இக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கோரிக்கைக்கு ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்காவிட்டால் தமது அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்து விலகிக் கொள்வது தொடர்பிலும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆராய்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

லண்டனிலிருந்து நாடு திரும்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ள இக் கடிதத்தில் முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்களென 12பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், எம்.எல். அமீர் அலி, எம்.எச். மொஹமட், ஏ.எச்.எம். பௌசி மற்றும் பிரதி அமைச்சர்களான கே.ஏ.பாயிஸ், எஸ். நிஜாமுடீன், மயோன் முஸ்தபா, பைசர் முஸ்தபா, ஹுசைன் பைலா ஆகியோர் இக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

அதேவேளை, ஈரான் சென்றுள்ள அமைச்சர் பேரியல் அஷ்ரப் சார்பிலும் அம்பாறையிலுள்ள அமைச்சர் அதாவுல்லா சார்பிலும் அவர்களது பிரதிநிதிகள் கையொப்பமிட்டுள்ளனர்.

இக் கடிதத்தின் பிரதியொன்று அமைச்சர் எம்.எச்.சேகு இஸ்சதீனுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர் கடிதத்தில் ஒப்பமிட்டு அனுப்பிவைக்கவில்லையெனத் தெரியவருகின்றது.

இந் நடவடிக்கை தொடர்பாக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அதிக ஆசனங்களைப் பெறும் சமூகத்தின் சார்பில் போட்டியிடும் ஒருவருக்கே கிழக்கு மாகாணத்திற்கான முதலமைச்சர் பதவியை வழங்குவதென ஜனாதிபதி வாக்குறுதியளித்திருந்தார்.

அதற்கமையவே தமிழ்ப் பிரதேசங்களில் பிள்ளையானின் பெயரிலும் முஸ்லிம் பிரதேசங்களில் ஹிஸ்புல்லாவின் பெயரிலும் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், முஸ்லிம்கள் 8 ஆசனங் களைப் பெற்றுள்ளதால் முதலமைச்சர் பதவி ஹிஸ்புல்லாவுக்கே வழங்கப்படவேண்டும்.

அதை வலியுறுத்தியே ஜனாதிபதிக்கு மேற்படி கடிதத்தை எழுதியுள்ளோம்.

ஜனாதிபதியில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை வீண்போகுமானால் எமது அமைச்சுப் பதவிகளை துறப்பதே எமது அடுத்த நடவடிக்கையாக இருக்கும் என்றார்.

தனது நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரரிவித்த அமைச்சர் சேகு இஸ்சதீன், இக் கடிதத்தின் பிரதி எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், சிலரது சுய அரசியல் இலாபங்களுக்காக அதில் கையொப்பமிட வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை.

ஒருவேளை, கையொப்பமிட்டுள்ள முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவிகளை இரா ஜினாமா செய்தால், எனது பதவி யை இராஜினாமா செய்வது தொடர்பாகவும் சிந்திப்பேன் என்று கூறினார்.

ஹிஸ்புல்லாவை முதலமைச்சராக நியமிக்காவிட்டால் தமது அமைச்சுப் பதவிகளை துறப்பதற்கு அமைச்சர்கள் முஸ் தீபுகளை மேற்கொண்டுள்ளபோதும், அவர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திலேயே அங்கம் வகிப்பார்கள் எனவும் கூறப்படுகிறது. (அ-5)

# முதலாம் தரத்துக்கு மாணவர் அனுமதி

## 31 ஆம் திகதி புதிய சுற்றுநிருபம்

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

அடுத்த வருடத்தில் பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான சுற்று நிருபம் எதிர்வரும்31 ஆம் திகதி வெளியிடப்பட இருப்பதாக கல்விமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். தேசிய ஆணைக்குழு மற்றும் நீதி மன்றத்தின் ஆலோசனை வழிகாட்டல் களுக்கமைய இந்த வருட அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்த சுற்று நிருபம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் அளவில் பாடசாலைக்கு முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வகையில் அதற்கு முன்கூட்டியே உரிய பணிகளை நிறைவு செய்வதும் இதன் நோக்கமாகும். இந்த வருடத்தில் ஏற்பட்ட தாமதம் அடுத்த வருடமும் ஏற்படாத வண்ணம் அமைச்சு கூடிய கவனம் செலுத்தியுள்ளது. மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான திகதி, விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் திகதி என்பன இம்மாதம் 31ஆம் திகதி வெளியிடப்படும் சுற்றுநிருபத்தில் வெளியிடப்படவுள்ளது. (அ-6)


## 22ஆவது வணிகஜோதி வெளியீட்டு விழா

இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்.
காலம் :- 16.05.2008 வெள்ளிக்கிழமை காலை 9.30
தலைவர் :- செல்வன் க.ஜெயகாந்
பிரதம விருந்தினர்:- திரு. வ.செந்தில்ராஜா
விரிவுரையாளர்,
இலங்கை தொழில்நுட்பவியல் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.
சிறப்புவிருந்தினர்:- திரு.இ. நாகராசா
நிர்வாக உத்தியோகத்தர்,
யாழ்.கல்வி வலயம்.
வெளியீட்டு உரை:- திரு.சி.சிவகுமாரன்
இளைப்பாறிய பொருளியல் ஆசிரியர்
யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி
அறிமுக உரை :- திரு.எஸ்.பாலபுத்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வணிகத்துறை வணிக முகாமைத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வணிக மாணவர் மன்றம்,
யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(1184)


# கலங்கினாள் காரை மாதா...

## கண்ணீர் அஞ்சலிகள்

அவதரிப்பு
26 - 11 - 1935



மறைவு
11 - 05 - 2008

வைத்திய கலாநிதி

## செல்வி நவமலர் கனகரட்ணம்

(யாழ்.போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளர்)

ஆற்றுதற் கரிதே! ஆற்றுதற் கரிதே !
போற்றரு ங்கீர்த்தி புகழ்மிகு பெரியோய் !
கற்றவர் போற்றுங் காரை மாநகரில்
கருங்காலி வாசன் கனக ரத்தினம்
பெற்றநற் செல்வி பேசரும் வைத்திய
கலாநிதி யாகக் கற்றுத் தேறி
முல்லை வன்னி மன்னார் யாழ்.நகர்
தெல்லி யூரிலும் சேவை புரிந்தீர் !
வைத்தியர் போற்றும் அதிகாரி யானீர்
நவமலர் என்னும் நற்பெயர் கொண்டீர்
புதுவித மான புற்று நோயாலே
அவல முற்றோர்க்கு அரியதோர் காப்பகம்
ஆக்கித் தந்த அன்னையும் நீரே!
புவிபுகழ் சுதுமலை புவனேஸ் வரியை
தினமும் தொழுது சேவை புரிந்தீர்!
மண்ணவர் போற்றும் வைத்திய மணியே
எங்கு சென்றனையோ ! எங்கு சென்றனையோ
காரை மாநகரம் கண்ணீர் வடிக்க
பாருள மாந்தர் பதறித் துடிக்க
தில்லைக் கூத்தன் சேவடி சேர்ந்தீர் - நின்பிரிவு
ஆற்றுதற் கரிதே ஆற்றுதற் கரிதே

விழிநீர் சொரியும் காரைநகர் மக்கள்

(C/1114)

# திருமலைத் துறைமுகத் தாக்குதல் பொருளாதாரத்தின் மீது வீழ்ந்த அடி

## 'த பொட்டம்லைன்' ஆங்கில வார ஏடு தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தில் கடந்த சனிக்கிழமை அதிகாலை நிறுத்தப்பட்டி ருந்த விநியோகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதானது இலங்கையின் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் "த பொட்டம் லைன்" ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு, திருகோணமலை துறைமுகம் பாதுகாப்பானதா? ஏனைய துறைமுகங்கள் பாதுகாப்பானவையா? என்ற கேள்விகள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள்.

திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான படையினர், தமது காவல் அரண்களில் கடந்த சனிக்கிழமை காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், விடுதலைப் புலிகளின் லெப். கேணல் கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவு கொமோண்டோக்கள் தாக்குதலுக்கு ஆயத்தமானார்கள்.

இத் தாக்குதலுக்கு முன்னர் அவர்கள் துறைமுகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை சேகரித்திருந்தனர். நீரடி நீச்சல் பிரிவினர் வெடிகுண்டுடன் துறைமுகத்தை நோக்கி நகர்ந்தபோது, கடற்படையினரின் "சக்தி" என்ற விநியோகக் கப்பல் துறைமுகத்தில் இருந்து ஒரு மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது.

முன்னர் கிறீக் தேசத்தில் பதிவு செய் யப்பட்டிருந்த எம்.வி. இன்வின்சிபிள் என்ற விநியோகக் கப்பல் துறைமுகத்தில் இருந்து அரை மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது. 83 மீ. நீளமும், 12 மீ. அகலமும் உடைய இக் கப்பல் 3,200 தொன் நிறையை எடுத்துச் செல்லக் கூடியது. எனினும், கடற்புலிகள் "சக்தி" என எண்ணி இக் கப்பலை தவறுதலாக தகர்த்து விட்டனரா என்ற சந்தேகமும் கடற்படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

அதிகாலை 2.15 மணிக்கு தாக்கப்பட்ட கப்பல் அதிகாலை 4.30 மணியளவில் மூழ்கியது. இத் தாக்குதல் நடைபெற்றபோது கடற்படையினரின் 10 சுற்றுக்காவல் படகுகள் தேடுதல் வெளிச்சம் பாச்சிய படி துறைமுகப் பகுதிகளில் தேடுதலில் ஈடுபட்டிருந்தன. ஆனால் அவற்றால் விடுதலைப் புலிகளைக் கண்டறிய முடியவில்லை.

இப் படகுகளில் சோனார் கருவிகள் இருக்கவில்லை. இக் கருவிகள் நீருக்கு அடியிலான தாக்குதலைத் தடுப்பதற்கு உரியவை.

ஆழ்கடலில் தாக்குதலை நடத்திய கடற்படையினரால் திருகோணமலை துறைமுகத்தை பாதுகாக்க முடியவில்லை.

2007 ஆம் ஆண்டு கடற்படையினர் மேற்கொண்ட ஆழ்கடல் நடவடிக்கைகளில் இக் கப்பல் விநியோகங்களை மேற்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் இத் தாக்குதல் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது.

வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதல் இலங்கைக்கு வரும் கப்பல்களின் காப்புறுதி தொகையை அதிகரிக்கச் செய்யும். அது பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களும் ஆபத்தான துறைமுகங்களாக தரப்படுத்தப்படலாம். இது தமிழ் மக்களின் உளவுரணை அதிகரிக்கச் செய்யும். திருகோணமலைத் துறைமுகம் பெரும் பாதுகாப்பு குறை பாடுகளைக் கொண்டது.

துறைமுகத்தின் தென் பகுதி பாதுகாப்பு வலையைக் கொண்டது அல்ல. துறை முகத்தின் வடபகுதி பாதுகாப்பு வலைகளை கொண்டுள்ள போதும் அதிலும் பல குறைபாடுகள் உள்ளன.

எனினும் பாதுகாப்புக் காரணங் களை முன்னிட்டு அதனை இங்கு தெரிவிக்க முடியாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

## பிராந்திய உற்பத்தியாளர்களுக்கான தகவல் வழிகாட்டி வெளிவந்துள்ளது

(கொழும்பு)

'இலங்கையின் சமாதானத்திற்காக பிராந்தியத்தில் வணிகத்தினை வலுப்படுத்தல்' எனும் சுலோகத்தை கொண்ட சமாதானக் கூட்டணிக்கான வணிக (BPA) அமைப்பு சிறிய மற்றும் நடுத்தர பிராந்திய உற்பத்தியாளர்களுக்கான தகவல் வழிகாட்டி நூலினை செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்த தகவல் வழிகாட்டலில் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் இலங்கை முழுவதுமுள்ள தொழில் முயற்சியாளர்களுக் கிடையில் விரைவானதொரு வலையமைப்பினை உருவாக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழிகாட்டி இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் உற்பத்தியாளர்களைத் தொடர்பு கொள்ளும் விபரங்கள் அடங்கியிருக்கின்றனர். அடுத்த பகுதியில் சமாதானக் கூட்டணிக்கான வணிக அமைப்பின் அங்கத்தவர்களாக விருக்கும் பிராந்திய தொழில் முயற்சியாளர்கள் பற்றிய விபரங்களும் ஆக்கங்களும் அடங்கியிருக்கின்றன.

இந்த வழிகாட்டி நூல் புதன்கிழமை முதல் amazon.com இல் விற்பனைக்கிருக்கும் என விஜிதயாபா பதிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த வழிகாட்டி மூலம் தூரப் பிரதேசங்களான கிழக்கு மாகாணம், அனுராதபுரம், மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள பிராந்திய உற்பத்தியாளர்களுடன் தேசிய வணிக நிறுவனங்கள் அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்கள் சர்வதேச சமூகம் என்பன இணைந்து பாணியாற்றுவதற்கு வழிசமைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)


# கண்ணீர் அஞ்சலி



வணிகர்களுள் இரத்தினமாய் இங்குவாழ்ந்து
வர்த்தகர்க்கு இலக்கணமாய் வாழ்ந்துகாட்டி
வானத்தில் ஓர் நட்சத்திரமாய் உதிக்கவென்றா
வையத்தைவிட்டு நீங்கள் எமைப் பிரிந்தீர்கள்.
இன்முகம் காட்டி எமை இனிதே வரவேற்கும்
இரட்ணலிங்கம் ஐயாவே
இப்புவியில் வாழ்ந்தது போதுமென்றா
இறைவனடி சேர்ந்தீர் எமைப் பிரிந்து.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

தம்பு இரட்ணலிங்கம்
(உரிமையாளர் பொப்புலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ்)

யாழ். வணிகர் கழக நிர்வாகசபை
உறுப்பினர்கள், ஊழியர்கள்,
வர்த்தக நண்பர்கள்.

ஓநாய்க்கு கருணை காட்டுவது –ஆட்டுக்குட்டிக்குக் கொடுமை செய்வதாகும்.

–ஆப்கானிஸ்தான்

வலம்புரி

# நாளைய இலங்கையின் நிதர்சனம் எது?

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்தாயிற்று. நம் நாட்டில் எது நடந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலை தமிழ்த் தினப் போட்டி முதல் பொதுத் தேர்தல் வரை நீண்டு செல்வது துரதிர்ஷ்டமே.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடந்தாயிற்று. உறுப்பினர்களின் தெரிவும் முடிந்து போயிற்று. ஆக கிழக்கு மாகாணத்துக்கான முதலமைச்சர் பதவியொன்றே பாக்கியாக உள்ளது.

யார் முதலமைச்சர் என்ற கேள்விகள் அர்த்தமற்றவையாயினும், முஸ்லிம் தரப்பைச் சேர்ந்த ஹிஸ்புல்லா உட்பட, ஜாதிக ஹெல உறுமயவின் தேரர்கள் வரை கிழக்கை சொந்தம் கொண்டாடுவதை பார்க்கும்போது நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்து விட்டால் என்ற பாரதியின் பாடல் வரிகளே நினைவுக்கு வருகின்றன.

ஒரு புறத்தில் தமிழருக்கு உரிமை வேண்டுமென்ற போராட்டம். மறுபுறத்தில் தமிழரின் வடக்கு கிழக்கு தாயகத்தை கூறு போடுவதற்கான ஒத்துழைப்புக்கள், அதன் விளைவாக இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டது.

அந்தப் பிரிப்போடு தேர்தல். அதன் முடிவு கிழக்கில் சிங்கள மக்களை குடியேற்ற வேண்டுமென்ற ஜாதிக ஹெல உறுமயவின் அறிவித்தல். இதுவே நடந்து முடிந்த நாடகம். இவ்விதம் நாடகம் நடந்து முடிந்தாலும் கிழக்கு மாகாண சபை மட்டும் நேர்த்தியாக இயங்கும் என்ற முடிவுக்கு நாம் வந்து விட முடியாது.

குண்டு வெடிப்புக்கள், துப்பாக்கி சூடுகள் அதன் வழி அனுதாபப் பிரேரணைகள் என்ற இலங்கைத் திருநாட்டின் சமகால கலாசாரம் அரங்கேறும்.

தேர்தல் நடத்தி விட்டோம் என ஒரு தரப்பு அடையும் நிம்மதியின் மறுதாக்கம் அவலக் குரல்களும்,முழவ ஒலிகளுமாகவே இருக்கப் போகின்றன.

வாழுங்காலத்தில் எல்லோரும் எல்லா நலனும் பெற்று வாழ்வோம். அதுவே உயரிய மானிடப் பிறப்பிற்கு மகிமை என்ற உணர்வு என்று எல்லா சமூகத்திலும் ஏற்படுகின்றதோ அன்றுதான் இலங்கைக்கு விடிவு.

அன்றுதான் விஞ்ஞான வளர்ச்சி பற்றியும் தகவல் தொடர்பாடலின் அவசியம் பற்றியும் இலங்கையின் மனித சமூகம் உணரத்தொடங்கும். அதுவரை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் 'ஒரே நாளில் பலர் பலி' என்ற சோக வாசகங்களே ஊடகங்களை அலங்கரிக்கப் போகின்றன.

அவற்றை தினம்தினம் தரிசிக்கும் சின்னஞ் சிறுசுகள் விளையாட்டு துப்பாக்கிகளோடு தம் எதிரிகளை துரத்தப் போகின்றன. இதுவே நாளைய இலங்கையின் நிதர்சனம்.

# தமிழர் ஒருவரே முதலமைச்சராக வேண்டும் மூன்று அமைச்சர்கள் கருத்துத் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைக்கு தமிழர் ஒருவரே கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென ஆளும் கட்சியின் மூன்று அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் முதலமைச்சர் ஒருவர் கிழக்கிற்கு நியமிக்கப்படுவதற்கு ஆதரவாக அமைச்சரவை அந்தஸ்தற்ற சக்திவலுத்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன கருத்துத் தெரிவித்திருப்பதுடன் பிள்ளையானுக்கே முதலமைச்சர் வழங்கப்படவேண்டுமென தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே கூறியிருந்தார்.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் கிழக்கு மாகாணசபைக்குத் தமிழர் ஒருவரே முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் அதனை 41 வீத மானவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் அமைச்சரவை அந்தஸ்தற்ற நீதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். மூன்று இனங்களையும் சேர்ந்தவர்கள் கிழக்கு மாகாணத்தில் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது என கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்திருக்கும் அமைச்சர், தமிழ்மக்கள் அங்கு அடக்கப்பட்டே வந்ததால் அதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

மீண்டும் ஒருமுறை தமிழர்களின் அரசியல் உரிமை மறுக்கப்பட்டதாக அவர்கள் நினைக்கக்கூடும் என அமைச்சர் குறிப்பிட்டார். முதலமைச்சருடைய பெயரை கூறவேண்டுமென எவரும் அவசரப்படுத்த வில்லை. எனவே கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கூடி முதலமைச்சர் யார் என்பதைத் தெரிவுசெய்யட்டும். தமிழர் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்பது உரிமை என்பதை விளங்கப்படுத்தும் என டிலான் பெரேரா கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஹிஸ்புல்லா போட்டியிட்டு முஸ்லிம் பிரதிநிதிகள் கூடுதலாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளபோதும் அது ஹிஸ்புல்லாவின் தனியான முயற்சி அல்ல எனவும், ஏனைய முஸ்லிம் அமைச்சர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையே அதற்குக் காரணமெனவும் டிலான் பெரேரா கூறியுள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்தவர்கள் பலர் எம்முடன் உள்ளனர். அமைச்சர்களான அதாவுல்லா, ரிசாட் பதியுதீன், அமீர்அலி, மொகமட் பாயிஸ் ஆகியோர் உள்ளனர். அவர்கள் தமது சமூகத்தைப் பற்றிப் பேசுகின்றனர். எனினும் இறுதி நேரத்தில் எம்முடன் இணைந்துகொண்ட வேட்பாளர் ஒருவருக்கு அதனை வழங்கவேண்டுமென்றகட்டாயம் இல்லைஎன நீதி அமைச்சர் டிலான் பெரேரா கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றிடம் மேலும் தெரிவித்திருந்தார். (அ-5)

# மேலதிக ஆசிரியர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள தேசியப் பாடசாலைகளில் இருந்து 65 ஆசிரியர்கள், ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் ஆசிரிய இடமாற்றப் பிரிவுப் பணிப்பாளர் ஜே.எச்.எம்.டபிள்யு றஞ்சித் தெரிவித்துள்ளார்.

இவ் இடமாற்றங்கள் நாட்டின் தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரிய இடமாற்ற கொள்கைக்கு அமைவாகவே செயல்படுத்தப்பட்டுள்ளதாக அரசதகவல்திணைக்களத்தின் ஊடக அறிக்கை தெரிவிக்கின்றது.

இதுவரை கொழும்பு, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் பிரதேசங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள். மேலும் வடமேல் மாகாணத்தில் இருந்து 90 ஆசிரியர்களின் பட்டியல் இடமாற்றக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2ஆவது கட்டமாக தேசிய பாடசாலைகளில் 8 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவின் சிபாரிசுடனும் அமைச்சரவை அங்கீகாரத்துடனும் புதிய இடமாற்றத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# இராணுவ நடவடிக்கை ஜனநாயகத்தில் பாரிய தாக்கம் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கையானது ஜனநாயகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அதிக எண்ணிக்கையிலான இராணுவச் செலவானது அச்சுறுத்தும் வகையில் அமைந் திருப்பதாக கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் மொப்ரியா தெரிவித்துள்ளார் .

இலங்கை ஏற்கனவே யுத்தம் எனும் கொடூரத்துக்குள் மூழ்கியிருப்பதுடன் புதிதாக முன்னெடுக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் ஜனநாயகத்தின் செயற்பாட்டிற்கு தடையாக அமைந்துள்ளது என்பதே கனேடிய பாராளுமன்றத்தின் நிலைப்பாடு என அவர் கூறியுள்ளார்.

1980களிலிருந்து இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதும் விடுதலைப் புலிகள் பொது மக்களுக்கு எதிரான கொடூரத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். கனடா உட்பட பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பெருந்தொகையான நிதியை விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவருவதாக ரியா சுட்டிக்காட்டியுள்ளார் .

மோதல்கள் தொடர்பான இராணுவ நடவடிக்கைகள் ஜனநாயகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதிக எண்ணிக்கையிலான இராணுவச் செலவானது அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. 2000ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் அதற்கு முந்தைய வருடத்தை விட 50வீதம் அதிகமானது.

2008ஆம் ஆண்டு பாதுகாப்புச் செலவீனம் கடந்த வருடத்தை விட 20வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதாவது 1.48பில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது. அனைத்துப் பொது செலவுகளை விட பாதுகாப்புச் செலவீனம் அதிகமாக உள்ளது என அவர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என மேலைத்தேய நாடுகள் கூறுகின்ற போதும் அவை இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கலாகவுள்ளது. இலங்கை, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் ஆயுத உதவிகளைக் கோரியுள்ளது.

ஈரான் ஜனாதிபதி அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இந்த நாடுகள் இலங்கை ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டும் என வலியுறுத்துவதற்கு விரும்புவதில்லை. பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை நேரடியாக அந்த நாடுகள் வழங்குகின்றன என்று கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் மொப்ரியா தெரிவித்துள்ளார். (அ-5)

# பிரபஞ்சத்தை அகப்படுத்தி சகல உயிர்களையும் ஆட்கொள்ளும் ஒரே தெய்வம் சத்திய சாயி



1970ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் இந்தியாவிற்கு பயணமானார். இவர் ஒரு சிவபக்தர். இவருக்குச் சொந்தமாக ஒரு ஸ்ருடியோவும் கொழும்பில் இருந்தது. இதன் தொழில்நுட்பங்களை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடனேயே இவர் இந்தியா சென்றார். அங்கு சென்று தங்கியிருக்கும் வேளை அங்கிருந்தோர்கள் பகவான் பாபாவின் அற்புதங்களைப் பற்றியும் ; அவரின் தெய்வீகத் தன்மையையும் பேசிக்கொண்டனர்.

இப்பேச்சினால் மனக் குழப்பமடைந்தவராய் மனித உருவில் இறைவன் இருக்க முடியாது. அதுவும் நான் வணங்கும் சிவனுக்கு இணையாக இவர் இருப்பாரோ என்று அருகில் இருந்தவர்களுடன் தர்க்கித்துக் கொண்டார். இருந்தும் ஒரு வித குழப்ப நிலையில் இருந்த அவ் வர்த்தகர் தனது நெருங்கிய நண்பருடன் மறுநாளே புட்டபர்த்திக்கு சென்றார். அங்கு பிரசாந்தி நிலையத்தில் பகவானின் தரிசனம் கிடைக்கப் பெற்றார். பகவானைப் பார்த்ததும் பகவானின்பால் கவரப்பட்டவராய் தொடர்ந்து மூன்று நாட்கள் பிரசாந்தி நிலையத்திலேயே தங்கியிருந்தார்.

அம்மையும் அப்பனுமாக என்னைக் காத்தருளும் சிவபெருமானாக இவரை கொள்ளலாமா? எனும் ஐயப்பாட்டுடன் இருந்த இவருக்கு கால நேரம் கூடியது போல பகவானின் தரிசனம் மிக அண்மையாக கிடைத்தது. அவ்வேளை இவ் வர்த்தகர் பகவானின் கமலப் பாதத்தை தொட்டு வணங்கினார், பகவான் அவரை சம்பாசிக்கும் அறைக்கு அழைத்து உனது சந்தேகம் தீர்ந்ததா என வினவினார். நீயோ சிவனை வணங்குபவன் உனக்கு நான் சிவனாக தோற்ற வேண்டும என்பது உனது விருப்பம். இன்னொருவருக்கு நான் அல்லாவாக இருக்கவேண்டும். மற்றவருக்கு யேசுவாக இருக்க வேண்டும். நான் என்ன செய்ய ? என யோசனை செய்பவராக இருக்க, வர்த்தகரும் பகவானிடம் சரணாகதி அடைந்தவராய் சுவாமி நான் உங்களை ஒரு படம் எடுத்துக்கொள்ளட்டுமா? என்றதும் நாளைக்கே அதை செய் என்றார்.

மறு நாள் பகவானே இவர் தங்கியிருந்த அறைக்கு தேடிச்சென்று படமெடுக்கச் காட்சி தந்தார். பின்பு பகவானை வணங்கி விடை பெற்று சென்னைக்கு வந்ததும் தான் தங்கியிருந்த ஸ்ரூடியோவில் அப்படச்சுருளை புகைப்படமாக்கிப் பார்த்ததும் ஆச்சரியம் மேலிட்டது. சடாமுடியில் மூன்றாம் பிளைச்சந்திரன் தோன்ற கங்கை பாய உருத்திராட்ச மாலையும் நாகமும் கழுத்தைச் சுற்றியிருக்க சூலாயுதம் தரித்த சிவனின் தோற்றமே காட்சியாக இருந்தது. மனமெல்லாம் சிவசாயி சிவசாயி என ஓலமிட்டது. அன்றிலிருந்து பிரபஞ்சத்தை தன்னகத்தே அகப்படுத்தி சகல உயிரிகளையும் ஆட்கொள்ளும் ஒரே தெய்வம் பகவான் பாபாவின் பக்தனாக இன்றும் மக்கள் சேவை செய்து வருகிறார் அவ் வர்த்தகர்.

ஜெய்சாயிராம் யாதவன்.

# ஜே.வி.பியின் மாநாடு நாளை கொழும்பில்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) 5ஆவது மாநாடு கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதுடன் ஜே.வி.பி யிலிருந்து விலகிச்சென்று புதிய கட்சியை ஆரம்பித்துள்ளவர்கள் ஜே.வி.பியில் வகித்த சகல பதவிகளுக்கும் இந்த மாநாட்டிலேயே புதியவர்கள் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பார்களாயின் அவர்கள் கட்சியில் வகித்த சகல பதவிகளும் வலுவிழந்து விடும் என்று முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டிலேயே கட்சியின் பிரசாரக் குழுச் செயலாளர் மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் தலைவர் தெரிவு செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## தேர்தல் மோசடிகளுக்கு...

களுக்கு விளக்கம் அளிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதலே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்ட அவர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கிழக்குத் தேர்தல் மோசடிகள் குறித்து விளக்கமளித்திருப்பதாகக் கூறினார்.

அடுத்த கட்டமாக நாளை மருதானையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவிருப்பதுடன் அதன் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமின்றி ஜனநாயகத்தை மதிக்கும் கட்சிகள் பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள முன்வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

### தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை

நடைபெற்று முடிபடைந்திருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்தித்தபோது ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என விடுத்த கோரிக்கை நிறைவேற்றப்படாமையை தேர்தல்கள் ஆணையாளரிடம் எடுத்துக் கூறியிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க செயற்படுமாறு அதிகாரிகளுக்குத் தான் அறிவுறுத்தியிருந்தபோதும் அதனை நிறைவேற்ற அவர்கள் தவறிவிட்டார்கள் என தயானந்த திஸநாயக்க தம்மிடம் சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், தேர்தல்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற்று முடிந்ததாகத் தான் கூறிவில்லை என தம்மிடம் தெரிவித்தாகவும் கூறினார்.

இதற்கு ஆதாரமாக தனது அறிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் தம்மிடம் காண்பித்ததாகவும் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர் 'மாநாட்டில் தெரிவித்தார். தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைத்தாலும் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் தனக்கு இல்லை எனவும் தேர்தல்களை ஒத்திவைக்கும் அதிகாரம் 17-வது சட்டமூலத்திற்கு அமைய நியமிக்கப்பட்டிருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே இருப்பதாகவும் தயானந்த திஸநாயக்க தன்னைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் கூறியுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட தனக்கு தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் இல்லை எனத் தம்மிடம் கூறியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (ச-5)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழு

(நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் கீழானது)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட மனு தொடர்பானது**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் சார்பாகப் பெறப்பட்ட முறைப்பாடுகளில் தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் விசாரணைகள் நடாத்துவதற்காக அரசாங்க அதிபரினால் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 (4) ஆம் பிரிவின் கீழ் பாரதீனப்படுத்தப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளைத் தற்பொழுது ஆரம்பித்துள்ளது.

மேற்படி ஆலயம் தொடர்பாக ஆர்வமுள்ளவர்கள் இவ் விசாரணை ஆணைக்குழுவிற்குத் தகவல்களை வழங்க விரும்பின் கீழ் வரும் முகவரிக்குத் தங்கள் தகவல்களைத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்குபவர்கள் விசாரணை ஆணைக்குழு சமுகமளிக்கக் கோரும் சந்தர்ப்பங்களில் சமுகமளிக்கக் கடப்பாடுடையவர்கள் ஆவார்கள்.

தபால் முகவரி:-
**திரு. ஆ.சிவசுவாமி**
**மேலதிக அரசாங்க அதிபர்/தலைவர்,**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி**
**அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழு,**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

(C-1115)

**ஆ.சிவசுவாமி**
மேலதிக அரசாங்க அதிபர்/தலைவர்
விசாரணை ஆணைக்குழு,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.


# கருணாவுக்கு எதிராக வழக்குத் தொடர சர்வதேச ஷமா அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கருணாவை பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டவர் என்னும் குற்றச்சாட்டின்கீழ் உடனடியாக வழக்கு தொடருமாறு சர்வதேச ஷமா அமைப்பு பிரித்தானிய சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கருணா பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள அதேவேளை அவர் மீது இதுவரையில் எவ்வித குற்றச்சாட்டுகளும் இலங்கை அரசு சுமத்தியதாக இல்லை.

இதன் காரணமாக கருணாவுககு எதிராக வழக்கு தொடருமாறு மேற்படி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவை எவ்வாறாயினும் இலங்கையின் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கருணாவை இலங்கைக்கு திருப்பி அனுப்ப பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மன்னாரில் இருவரை காணவில்லை

மன்னார் முருங்கன்பிட்டி பள்ளக்கமம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான செபஸ்ரியான் சௌரி (வயது-44) என்ற தமிழ்க் குடும்பஸ்தரும் அதே பகுதியைச் சேர்ந்த ஆ.யு.சிராயுதீன் (வயது-52) என்ற முஸ்லிம் குடும்பஸ்தர் ஒருவருமே காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது. (ச)

# பருத்தித்துறையில் நேற்று பதற்றம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டியில் நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து நேற்று அப்பகுதியில் பாரிய பதற்ற சூழல் நிலவியது.

நேற்றுக் காலையில் வல்லைவெளியில் பாரிய சோதனை நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டனர். அனைத்து வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. நேற்று காலை 8 மணிவரையும் வல்லைப்பாலத்தினூடான போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருந்தது. (எ-5)

## கூட்டமைப்...

திருகோணமலை மாவட்ட மக்களும் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை தொகுதி மக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புத் தொகுதி மக்களும் அரசாங்கத்தை முழுமையாக நிராகரித்துள்ளனர்.

பட்டிருப்புத் தொகுதியில் வெற்றிலையில் போட்டியிட்டவர்களுக்கு 14ஆயிரத்து 379 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

எனவே இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமது வேண்டுகோளை ஏற்று அரசுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை இந்தத் தேர்தல் புள்ளி விபரங்கள் தெளிவாக காட்டுவதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பிரதான...

சாதிக்கும். ஆனால் ஜே.வி.பிக்குப் போட்டியாக எமது கட்சி இயங்காது.

எமது எழுச்சியைக் கண்டு இன்று பலர் அஞ்சி நடுங்குகின்றனர். ஜே.வி.பி. தலைமையின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் வரும் என நாம் நம்பவில்லை.

கொசோவா, சூடான் போன்ற இடங்களில் பிரிவினையை ஏற்படுத்திய அமெரிக்கா இன்று இலங்கையிலும் புலிகளைப் பயன்படுத்திப் பிரிவினையை ஏற்படுத்த முனைகின்றது.

நாட்டிலுள்ள பிரதான கட்சிகளுக்கு முக்கிய சவாலாக விளங்க வேண்டிய கட்சியாக ஜே.வி.பி. திகழ்ந்தது. ஆனால் அக் கட்சி அப்பணியைச் செய்யவில்லை. தேசிய சுதந்திர முன்னணி அப்பணியைச் செய்யும். அப்பணியைச் செய்வதில் உள்ள சவால்கள் குறித்து எமக்கு நன்கு தெரியும். இருப்பினும் இப் பணியில் நாம் வெற்றி பெறுவோம் என்றார். (ச-5)

## கருணா...

கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டனிலிருந்து கருணா நாடு கடத்தப்பட்டால் அவரை விமான நிலையத்தில் வைத்து அரசாங்கம் கைதுசெய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? என்ற கேள்விக்கே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கருணா விடயத்தை பிரிட்டிஷ் அரசாங்கமும் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் அவர் நாடு கடத்தப்படுகின்றபோது சட்டம் பதிலளிக்கும் என்றும் அவர் கூறினார். (ச-5)

## அழுத்தம்...

பல வருடங்களாகப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு இலங்கை உள்ளாகியுள்ளது. இந்த நீண்ட கால அச்சுறுத்தலை முழுமையாகத் துடைத்தெறியும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

புலிகள் தோல்வியடையும் சந்தர்ப்பங்களில் எல்லாம், சர்வதேச சக்திகள் மூலமும் உள்நாட்டிலுள்ள சில சக்திகள் மூலமும் அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

தற்காலிக போர்நிறுத்தங்களை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் பாதுகாப்புப் பெற முயற்சிக்கின்றனர். எத்தகைய அழுத்தங்கள் வந்தபோதிலும் புலிகளுடன் இன்னொரு போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள மகிந்த அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை.

புலிகளின் தலைவர் பிரபாகரன் எங்கிருந்த போதிலும் நவீன தொழில்நுட்ப ஆயுதங்கள் மற்றும் சாதனங்களின் உதவியுடன அவரைத் தேடி அழிக்க அரசாங்கம் திடசங்கர்ப்பம் பூண்டுள்ளது.

இந்தப் பணியை எமது படையினர் விரைவில் செய்து முடிப்பார்கள் என்றார் அவர். (ச-5)

## புலிகளுடன் பேசுவதில்...

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் ஏனைய நாடுகள் கைகொண்ட, கையாண்டு வருகின்ற அதே ஜனநாயக வழிமுறைகளையே நாமும் தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.

எவ்வாறாயினும் விடுதலைப்புலிகளைத் தோல்வியடையச் செய்வதற்கு உலகின் ஆதரவு தேவைப்படுகின்றது. புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் நாம் தோல்வியடைவோமானால் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் உலகம் தோல்வியடைந்துவிடும்.

எமது நாட்டின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் பல்வேறு தடைகளைக் கொண்டிருக்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் நாம் பெரும் இழப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

எமது படையினர் அப்பாவி மக்களுக்குத் தொல்லைகளைக் கொடுக்கவோ அல்லது சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கோ செல்லவில்லை.

புலிகளை வெற்றி கொள்ள முடியாது எனப் பலர் குறிப்பிட்டாலும் அவர்களின் பயங்கரவாதத்திலிருந்து நாம் கிழக்கு மாகாணத்தை விடுவித்துள்ளோம். கடந்த வாரம் கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலை நாம் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தியுள்ளோம். இதில் பல அரசியல் கட்சிகளும் போட்டியிட்டன.

புலிகளைத் தோல்வியடையச் செய்து நிராயுதபாணிகளாக்குவதற்கு எமது படையினர் முயற்சித்து வருகின்றனர். அதேநேரத்தில் இலங்கையிலுள்ள நெருக்கடிக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை வழங்கவும் நாம் உறுதியாகவுள்ளோம்.

இராணுவத் தீர்வில் நான் நம்பிக்கை கொண்டவன் அல்ல. உண்மையான அரசியல்தீர்வுக்கான அவர்களின் நோக்கம், ஆயுதங்களைக் கைவிடுவதற்கான தயார் நிலை என்பன குறித்து உறுதியளிக்கும் போது நாம் அவர்களுடன் பேசத் தயாராகவே உள்ளோம் என்றார் மகிந்த ராஜபக்ஷ. (ச-5)


**APEX HOSPITAL**
**(PVT) LIMITED**
**தேவை**

**மருத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)**

வயதெல்லை:- 18-25 கல்வித் தகைமை: -G.C.E (O/L)
விண்ணப்ப முடிவு :- 20.05.2008
**விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம்:-**
**நாவலர் பதிப்பகம்,**
**112, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.** (C-1112)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.